ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2113/16 - 2019 මාර්තු මස 05 වැනි අඟහරුවාදා - 2019.03.05

*2113/16 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/ 80 (6)*

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, உணவு ஆலோசனைக் குழுவுடனான கலந்தாலோசனையுடன் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு.
*2019*, பெப்புருவரி *12*.

ஒழுங்குவிதிகள்

இவ்வொழுங்குவிதிகள், *2019* ஆம் ஆண்டின் உணவு (காப்புமுறைப் பொருட்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் *2020* ஆம் ஆண்டு சனவரி மாதம் *01* ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. ஆளெவரும் பின்வருவனவற்றை உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, களஞ்சியப்படுத்தி வைத்தலோ, இடம்பெயர்த்தலோ, விற்றலோ, விற்பனைக்காகக் கொடைமுனைவு செய்தலோ, விநியோகித்தலோ, பயன்படுத்துதலோ அல்லது விளம்பரம் செய்தலோ ஆகாது -

(அ) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காப்புமுறைப் பொருட்கள் தவிர்ந்த ஏதேனும் உணவுக் காப்புமுறைப் பொருள் ;

(ஆ) இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவை தவிர்ந்த ஏதேனும் காப்புமுறைப் பொருள், எவ்வுணவில் அல்லது அதன்மேல் உளதோ, ஏதேனும் அவ்வுணவு.

3. ( "குறித்துரைக்கப்பட்ட உணவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) II ஆம் அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவு, அவ்வுணவில் அல்லது அதன்மேல், ( "அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள விவரணத்தின் காப்புமுறைப் பொருளொன்றைக் கொண்டிருக்கலாம் என்பதுடன், அத்தகைய காப்புமுறைப்பொருளின் பயன்பாடானது, அதன் III ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள விகிதாசாரங்களுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

4. ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட உணவானது, II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அவ்வுணவுக்குத் தோதான அக்காப்புமுறைப் பொருளின் ஆகக்கூடிய அளவின் வீதமொன்றாக, அத்தகைய உணவிலுள்ள அத்தகைய காப்புமுறைப் பொருள் ஒவ்வொன்றினதும் அளவு வெளிப்படுத்தப்படும்போது, அக்காப்புமுறைப் பொருட்களின் கூட்டுமொத்தத் தொகையானது நூறு சதவீதத்தை விஞ்சாதிருந்தால் மாத்திரம் அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புமுறைப் பொருட்களின் கலவையொன்றை அவ்வுணவில் அல்லது அதன்மேல் கொண்டிருக்கலாம்.

5. ஏதேனும் சேர்வையாக்கப்பட்ட உணவு -

(அ) அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள் :

(i) சேர்வையாக்கப்பட்ட உணவில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட உணவில் காணப்படின் ; அத்துடன்

(ii) அட்டவணை II இன் III ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விகிதாசாரத்துடன் தொடர்புடைய விகிதாசாரத்தைவிட, மிகையல்லாத விகிதாசாரத்தில் குறித்துரைக்கப்பட்ட உணவில் காணப்படின் ; அத்துடன்

(ஆ) சேர்வையாக்கப்பட்ட உணவானது குறித்துரைக்கப்பட்ட உணவொன்றாகவுமிருந்து, அது எவையேனும் அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருட்களை அதற்கான III ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ளதைவிட ஏதேனும் மிகையான விகிதாசாரத்தில் உள்ளடக்காததாகவுமிருப்பின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட உணவுகளைப் பயன்படுத்தி அத்தகைய உணவைத் தயாரிக்கும் செயல்முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏதேனும் அனுமதியளிக்கப்பட்ட காப்புமுறைப் பொருளை உள்ளடக்கலாம்.

6. ஆளெவரும் -

(அ) அத்தகைய காப்புமுறைப் பொருள், உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பின் (FAO) உணவுச் சேர்மானங்கள் தனிவரைவுகள் பற்றிய இணைந்த கருத்துரைக்கான ஒன்றிணைந்த நிபுணர் குழுவினால் (JECFA) விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இசைவானதாக இருந்தாலேயொழிய,

(ஆ) இதற்கான அட்டவணை (iii) இல் (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளிலுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க சுட்டுத் துண்டொன்றைக் கொண்டிருக்கும் கொள்கலன் ஒன்றில் தவிர,

உணவுத் தயாரிப்பில் கலப்புக்கூறொன்றாகப் பயன்படுத்துவதற்காக (ஏதேனும் வேறு பதார்த்தத்துடன் கலக்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிக்கப்பட்ட காப்புப்பொருள் உட்பட) ஏதேனும் அனுமதிக்கப்பட்ட காப்புப்பொருளை உற்பத்தி செய்தலோ, இறக்குமதி செய்தலோ, களஞ்சியப்படுத்தி வைத்தலோ, இடம்பெயர்த்தலோ, விற்றலோ, விற்பனைக்காக கொடைமுனைவு விநியோகித்தலோ, பயன்படுத்துதலோ அல்லது விளம்பரம் செய்தலோ ஆகாது.

7. முரணான உட்கருத்து வெளிப்படுத்தப்பட்டாலொழிய, இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா விகிதாசாரங்களும் உற்பத்திப் பொருளின் எடையை வைத்துக் கணிக்கப்பட்ட விகிதாசாரங்களாகும்.

8. எக்கொள்கலனுக்கு அல்லது உணவுப் பொதிக்கு இவ்வொழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள் சேர்க்கப்பட்டுள்ளதோ, அக்கொள்கலன் அல்லது உணவுப்பொதி ஒவ்வொன்றிலுமுள்ள சுட்டுத்துண்டானது, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான அல்லது மாற்றீடு செய்யப்பட்டவாறான, 2005, சனவரி 19 ஆந் திகதிய 1376/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரப்படுத்தல்) ஒழுங்குவிதிகள் 2005 இல் தரப்பட்டுள்ள வெளிப்படுத்துகை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறு யூன் 19 ஆந் திகதிய, 615/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உணவு (காப்புமுறைப் பொருட்கள்) ஒழுங்குவிதிகள் 1989 இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

10. இவ்வொழுங்குவிதிகளில்-

"காப்புமுறைப் பொருள்" என்பது, நுண்ணுயிரினால் ஏற்படுத்தப்படும் சீர்கேடுக்கெதிராகப் பாதுகாப்பதன் மூலம், உணவொன்றின் பயனுகர் காலத்தை நீடிக்கின்ற ஓர் உணவுச் சேர்மானம் எனப் பொருள்படும்.

"சேர்வையாக்கப்பட்ட உணவு" என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கலப்புக்கூறுகளைக் கொண்டுள்ள உணவு எனப் பொருள்படும்.

## அட்டவணை I

அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருட்கள்

| நிரல் I | | நிரல் II | |
|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள் | INS இல. | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள் எம்மாற்றுப் படிவத்தில் பயன்படுத்தப்படலாம் என்பது, (நிரல் I இல் காட்டப்பட்டுள்ளவாறான அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருளின்படி கணிக்கப்பட வேண்டியது) | INS இல. |
| 1. சோர்பிக் அமிலம் | 200 | சோடியம் சோர்பேட் | 201 |
| | | பொட்டாசியம் சோர்பேட் | 202 |
| | | கல்சியம் சோர்பேட் | 203 |
| 2. பென்ஸோயிக் அமிலம் | 210 | சோடியம் பென்ஸோவேற் | 211 |
| | | பொட்டாசியம் பென்ஸோவேற் | 212 |
| | | கல்சியம் பென்ஸோவேற் | 213 |
| 3. சல்பர்டை ஒக்சைட்டு | 220 | சோடியம் சல்பைற்று | 221 |
| | | சோடியம் ஹைட்ரஜன் சல்பைற்று | 222 |
| | | சோடியம் மெற்றாபை சல்பைற்று | 223 |
| | | பொட்டாசியம் மெற்றாபை சல்பைற்று | 224 |
| | | பொட்டாசியம் சல்பைற்று | 225 |
| | | பொட்டாசியம் ஹைட்ரஜன் சல்பைற்று | 228 |
| | | கல்சியம் சல்பைற்று | 226 |
| | | கல்சியம் ஹைட்ரஜன் சல்பைற்று | 227 |
| 4. ஓர்தொபீனைல்பீனோல் | 231 | சோடியம் ஓர்தொபீனைல்பினேட் | 232 |

| நிரல் I | | நிரல் II | |
|---|---|---|---|
| 5. நைசின் | 234 | | |
| 6. பொட்டாசியம் நைத்திரேற்று | 249 | | |
| 7. சோடியம் நைத்திரேற்று | 250 | | |
| 8. புரோபியோனிக் அமிலம் | 280 | சோடியம் புரோபியோனேட் | 281 |
| | | கல்சியம் புரோபியோனேட் | 282 |
| | | பொட்டாசியம் புரோபியோனேட் | 283 |

**அட்டவணை II**

அட்டவணை I இன் நிரல் I மற்றும் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருளைக் கொண்டிருக்கக்கூடிய உணவுப் பண்டங்கள் அத்துடன் ஒவ்வொரு விடயத்திலும் அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருளின் தன்மையும் அளவும்.

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./ கி. கி.) |
| 1.0 பாற்பொருள் உற்பத்திகள் | | |
| (அ) பாற்பொருளை அடிப்படையாகக் கொண்ட பானங்கள், சுவையூட்டப் பட்ட சோபேற்றுகள் மற்றும்/ அல்லது நொதிக்கவைக்கப் பட்டவை (உ-ம்.- சொக்லேட் பால் கொக்கோ, பருகக்கூடிய யோகெட், மோரை அடிப்படையாகக் கொண்ட பானங்கள்) (*நொதிக்க வைத்த பின்னர் வெப்பத்தினால் பரிகரிக்கப்பட்ட, சுவையூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களில் பயன்படுத்து வதற்கு மாத்திரம்) | சோர்பேற்றுக்கள்<br>அல்லது<br>புரோபியோனிக் | 1000*<br>GMP |
| (ஆ) முற்பொதியிடப்பட்ட, துண்டுகளாக்கப் பட்ட பாற்கட்டி | சோர்பேற்றுகள் | 1000 |
| (இ) முதிர்ந்த பாற்கட்டி, பதனிடப்பட்ட பாற் கட்டி, பூசக்கூடிய பாற்கட்டி மற்றும் பாற்கட்டிப் பசை | சோர்பேற்றுகள்<br>அல்லது நைசின்<br>புரோபியோனேட்ஸ் | 3000<br>12<br>GMP |
| (ஈ) பாற்பொருளை அடிப்படையாகக் கொண்ட, வெப்பத்தினால் பரிகரிக்கப் படாத ஈற்றுணவுகள். (உ-ம் : சுவையூட் டப்பட்ட யோகெட்) (*தயிர், பழச் சுவை யூட்டப்பட்ட ஜெலி யோகெட் மற்றும் "x" மாத்திரமுள்ள யோகெட்) (*பழ யோகெட்டுக்கு மாத்திரம்) | சோர்பேற்றுக்கள்<br>அல்லது<br>சல்பைற்றுக்கள்<br>அல்லது நைசின்<br>அல்லது<br>புரோபியோனேட்ஸ் | 3000*<br><br>50*<br>12<br><br>GMP |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./ கி. கி.) |
| (உ) உறையவைத்த பால் (சாதாரணமானது) | சோர்பேற்றுக்கள் | 1000 |
| (ஊ) குடிபான வெண்மையாக்கிகள் | சோர்பேற்றுக்கள் | 200 |
| (எ) கெட்டியாகிய பாலேடு (சாதாரணமானது) | நைசின்<br>புரோபியோனேட்ஸ் | 10<br>GMP |
| (ஏ) முதிராத பாற்கட்டி | சோர்பேற்றுக்கள்<br>அல்லது<br>புரோபியோனேட்ஸ் | 1000<br><br>GMP |
| (ஐ) பாற்கட்டித் தூள் (மாற்றியமைத்தலுக்காக) | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஒ) மோர் பாற்கட்டி | சோர்பேற்றுக்கள் | 1000 |
| (ஓ) மோர் புரத பாற்கட்டி | சோற்பேற்றுக்கள்<br>அல்லது நைசின்<br>புரோபியோனேட்ஸ் | 3000<br>12<br>3000 |
| (ஐ) திரவ மோர் மற்றும் மோர் உற்பத்திப் பொருட்கள் | புரோபியோனேட்ஸ் | GMP |
| 2.0 எண்ணெய்யினுள் பிரதானமாக நீர் வடிவில் காணப்படும் கொழுப்புப் பால்மங்கள் | | |
| (அ) கொழுப்புப் பரவி, பாற்பொருள் கொழுப்புப் பரவி மற்றும் கலப்புற்ற கொழுப்புப் பரவி | சோர்பேற்றுக்கள் | 2000 |
| (ஆ) மரக்கறி மற்றும் விதை வடிசாறுகளும் அவை பூசப்பட்டவையும். (உ-ம் : வேர்க் கடலை வெண்ணெய்) (*சக்திக் குறைப்பு உற்பத்திப் பொருட்களில் மாத்திரம் பாவிப்பதற்காக) | சோர்பேற்றுக்கள்<br>அல்லது<br>சல்பைற்றுக்கள்<br>அல்லது<br>புரோபியோனேட்ஸ் | 1000*<br><br>300<br><br>GMP |
| 3.0 பழங்கள், மரக்கறிகள் மற்றும் செயற்கையாக சுவையூட்டப்பட்ட பானங்கள் | | |
| 3.1 பழங்கள் மற்றும் பழ உற்பத்திப் பொருட்கள் | | |
| (அ) மேற்பரப்பு பதனிடப்பட்ட புதிய பழங்கள் | சல்பைற்றுக்கள்<br>அல்லது<br>ஓதோபெனில் பீனோல்<br>அல்லது சோடியம்<br>ஓதோபீனோல் பீனேற் | 30<br><br>12<br><br>12 |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *குறித்துரைக்கப்பட்ட உணவு* | *அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள்* | *ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./கி. கி.)* |
| (ஆ) உலர்ந்த வழுங்கள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 500 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 1000 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (இ) உறைந்த பழங்கள் | சல்பைற்றுக்கள் அல்லது | 500 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஈ) சர்க்கரைப் பாகிலிடப்பட்ட, பளிங்காக் கப்பட்ட அல்லது இனிப்புச் சேர்த்து செய்யப்பட்ட பழங்கள் மற்றும் எலுமிச்சை இன பழங்களின் தோல் | சோர்பேற்றுக்கள் அல்லது | 500 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (உ) வினாகிரி, எண்ணெய் அல்லது உப்புக்கரைசல் என்பனவற்றில் இடப்பட்ட பழங்கள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 1000 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஊ) பழங்களை அடிப்படையாகக் கொண்ட பூசியுண்ணப்படும் உணவுகள் உ-ம் : சட்னி | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (எ) கூழ், வடிசாறு, பழத்தினாலான பூசியுண்ணும் உணவுகள் உட்பட பழத் தயாரிப்புக்கள் மற்றும் தேங்காய்ப் பால் | சோர்பேற்றுக்கள் அல்லது | 1000 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஏ) ஜாம், ஜெலி, மார்மலேட் | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் (எஞ்சியுள்ளவாறாக $SO_2$) அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஐ) சீனி குறைவாகவுள்ள அல்லது சீனி இல்லாத ஜாம் வகைகள், ஜெலி வகைகள், மார்மலேட் | சோர்பேற்றுக்கள் அல்லது | 500 |
| | சல்பைற்றுக்கள் (எஞ்சியுள்ளவாறாக $SO_2$) அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஒ) பழச்சுவையூட்டப்பட்ட நீரினாலான ஈற்றுணவுகள் உட்பட, பழத்தினா லான சிற்றுணவுகள் மற்றும் ஜெலிகப் | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 50 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./கி. கி.) |
| (ஓ) நொதிக்கவைக்கப்பட்ட பழத் தயாரிப்புக்கள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 1000 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஔ) பேஸ்ட்ரி வகைகளுக்காக பழநிரப்பிகள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 1000 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 100 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (க) பழச்சாறுகள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் | 50 |
| (ங) செறிவாக்கப்பட்ட பழச்சாறு (நுகர்வோருக்கு பரிமாறக்கூடிய வாறாக) | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் | 50 |
| (ச) பழத்தினாலான நெக்டார் (நுகர்வோருக்கு பரிமாறக்கூடிய வாறான) | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் | 50 |
| (ஞ) பழத்தினாலான செறிவாக்கப்பட்ட நெக்டார் (நுகர்வோருக்கு பரிமாறக் கூடியவாறான) | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் | 50 |
| (ட) ஐதாக்கிய பின்னர் நுகர்வுக்கென "நெல்லி", இஞ்சி மற்றும் எலுமிச்சை என்பவற்றுக்கு 15% தவிர, 25% இற்குக் குறையாத பழச்சாற்றையும், 40% m/m இற்குக் குறையாத மொத்த கரையக்கூடிய திண்மப் பொருட்களையும் கொண்டுள்ள பழரசங்கள் மற்றும் பழக் குழம்புகள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 1500 |
| | சல்பைற்றுக்கள் | 250 |
| (ண) ஐதாக்கிய பின்னர் நுகர்வுக்கென "நெல்லி", இஞ்சி மற்றும் எலுமிச்சை என்பவற்றுக்கு 30% தவிர, 50% m/m இற்குக் குறையாத பழச்சாற்றையும், 62% m/m இற்குக் குறையாத மொத்த கரையக்கூடிய திண்மப் பொருட்களையும் கொண்டுள்ள பழக்குழம்பு செறிவாக்கிகள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 3000 |
| | சல்பைற்றுக்கள் | 500 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./ கி. கி.) |
| (து) 5% m/m இற்குக் குறையாத பழச் சாற்றையும், 16% இற்கு மேற் படாத மொத்த கரையக்கூடிய திண்மப் பொருட்களையும் கொண்டுள்ள, ஐதாக்கமில்லாத நுகர்வுக்கான பழப் பானங்கள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் | 50 |
| (ந) தொழிற்துறை பயன்பாட்டுக்கான செறிவாக்கப்பட்ட பழச்சாறு | சல்பைற்றுக்கள் | 1500 |
| 3.2 நீரை அடிப்படையாகக் கொண்ட சுவை யூட்டப்பட்ட பானங்கள் | | |
| (அ) ஐதாக்கிய பின்னர் நுகர்வுக்கென (சுக்ரோஸாக கணக்கிடப்பட்டவாறு) 25% இற்குக் குறையாத சீனியைக் கொண்டுள்ள, செயற்கையாகச் சுவையூட்டப்பட்ட பழரசங்கள். | சோர்பேற்றுக்கள் அல்லது | 1500 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 250 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஆ) (சுக்ரோஸாக கணக்கிடப்பட்டவாறு) 5% இற்குக் குறையாத சீனியைக் கொண்டுள்ள, ஐதாக்கப்படாமல் நுகர்வுக்காக தயார் நிலையிலுள்ள செயற்கையாகச் சுவையூட்டப்பட்ட பானங்கள். | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 50 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (இ) நீரை அடிப்படையாகக் கொண்ட கார்பனேற்றப்பட்ட சுவையூட்டப் பட்ட பானங்கள் | சோர்பேற்றுக்கள் அல்லது | 300 |
| | பென்ஸோயேட்ஸ் அல்லது | 120 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 50 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஈ) செயற்கையாகச் சுவையூட்டப்பட்ட, செறிவாக்கப்படுகின்ற பாணி | சோர்பேற்றுக்கள் அல்லது | 1500 |
| | பென்ஸோயேட்ஸ் அல்லது | 600 |
| | சல்பைற்றுக்கள் அல்லது | 250 |
| | புரோபியோனேட்ஸ் | GMP |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *குறித்துரைக்கப்பட்ட உணவு* | *அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள்* | *ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./ கி. கி.)* |
| 3.3 (காளான், வேருணவுகள், கிழங்குகள், பயறு வகைகள், அவரையினங்கள் மற்றும் விதை வகைகள் உள்ளடங்கலான) மரக்கறித் தயாரிப்புக்கள். | | |
| (அ) தோல் உரிக்கப்பட்ட, வெட்டப்பட்ட அல்லது துண்டாக்கப்பட்ட புதிய மரக்கறிகள் (*உருளைக் கிழங்குகளில் பாவிப்பதற்கு மாத்திரம்) | சல்பைற்றுக்கள் | 50* |
| (ஆ) உறைந்த மரக்கறிகள் (*உருளைக் கிழங்குகளில் பாவிப்பதற்கு மாத்திரம்) | சல்பைற்றுக்கள் | 50* |
| (இ) உலர்ந்த நீர் அகற்றப்பட்ட மரக் கறிகள் | சல்பைற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 500<br>GMP |
| (ஈ) வினாகிரி, எண்ணெய், உப்புக் கரைசல் அல்லது சோயா சோஸில் இடப்பட்ட மரக்கறிகள் | சோர்பேற்றுக்கள் அல்லது சல்பைற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>100<br>GMP |
| (உ) மரக்கறிக் கூழ் மற்றும் தயாரிப்புக்கள் (உ-ம் : மரக்கறி ஈற்றுணவுகள் மற்றும் சோஸ் வகைகள், சக்கரைப் பாகிலிடப் பட்ட மரக்கறிகள்) (*உருளைக் கிழங்குகளில் பாவிப்பதற்கு மாத்திரம்) | சோர்பேற்றுக்கள் அல்லது சல்பைற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>300*<br>GMP |
| (ஊ) நொதிக்கவைக்கப்பட்ட சோயா உற்பத்திகள் தவிர, நொதிக்கவைக்கப் பட்ட மரக்கறிகள் | சோர்பேற்றுக்கள் அல்லது சல்பைற்றுக்கள் | 1000<br>500 |
| (எ) மரக்கறிச்சாறுகள் | சல்பைற்றுக்கள் | 50 |
| (ஏ) மரக்கறிச்சாறு செறிவானவை (நுகர்வோருக்கு பரிமாறக்கூடியவாறான) | சல்பைற்றுக்கள் | 50 |
| (ஐ) மரக்கறி நெக்டார் (நுகர்வோருக்கு பரிமாறக்கூடியவாறான) | சல்பைற்றுக்கள் | 50 |
| (ஒ) செறிவான மரக்கறி நெக்டார் (நுகர்வோருக்கு பரிமாறக்கூடியவாறான) | சல்பைற்றுக்கள் | 50 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./ கி. கி.) |
| (ஓ) தொழிற்துறை பயன்பாட்டுக்கான மரக்கறிச்சாறு | சல்பைற்றுக்கள் | 1000 |
| (ஔ) தொழிற்துறை பயன்பாட்டுக்கான செறிவாக்கப்பட்ட மரக்கறிச்சாறு | சல்பைற்றுக்கள் | 1500 |
| (க) ஊறுகாய் வகைகள் | சோர்பேற்றுக்கள் | 1000 |
| | அல்லது | |
| | சல்பைற்றுக்கள் | 100 |
| (ங) உலர்த்தப்பட்ட தேங்காய் மற்றும் தேங்காய்ப் பசை | சல்பைற்றுக்கள் | 50 |
| 4.0 கார்போஹைதரேட்டுகள், தானியங்கள் மற்றும் அவற்றின் உற்பத்திகள் | | |
| 4.1 கார்போஹைதரேட்டுகள் : | | |
| (அ) மாப்பொருள் (பால் மறப்பித்தலின் போதும் அதன் பின்னரும் கொடுக் கப்படும் உணவு மற்றும் குழந்தை களின் உணவு என்பவற்றில் பயன் படுத்தப்படும் மாப்பொருள் தவிர்ந் தவை) | சோர்பேற்றுக்கள் | 1000 |
| | அல்லது | |
| | சல்பைற்றுக்கள் | 50 |
| (ஆ) மாவு | சல்பைற்றுக்கள் | 200 |
| (இ) வெள்ளைச் சீனி, பிரக்டோசு, குளுக்கோசு, ஐசிங் சுகர், தூளாக் கப்பட்ட டெக்ஸ்ட்ரோசு தூள் | சல்பைற்றுக்கள் | 15 |
| (ஈ) பயிரிடப்பட்ட மற்றும் அரைக்கப்பட்ட வெள்ளைச் சீனி | சல்பைற்றுக்கள் | 70 |
| (உ) பழுப்புச் சீனி | சல்பைற்றுக்கள் | 40 |
| (ஊ) சீனிக் கரைசல்களும் பாணிகளும், பாகு மற்றும் வெல்லப்பாகு வகை கள் உட்பட (பகுதியளவில்) மாற்றப் பட்ட சீனி | சல்பைற்றுக்கள் | 70 |
| (எ) வேறு சீனிகள் மற்றும் பாணிகள், (உ-ம் : சைலோஸ், மேப்பிள் பாணி, சீனியிலான பூசியுண்ணும் உணவுகள்) | சல்பைற்றுக்கள் | 40 |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./கி. கி.) |
| (ஏ) குளுக்கோஸ் பாணி மற்றும் உலர்த்தப் பட்ட குளுக்கோஸ் பாணி | சல்பைற்றுக்கள் | 20 |
| (ஐ) உற்பத்தி நோக்கங்களுக்கான குளுக்கோஸ் பாணி | சல்பைற்றுக்கள் | 400 |
| (ஒ) உற்பத்தி நோக்கங்களுக்கான உலர்த்தப் பட்ட குளுக்கோஸ் பாணி | சல்பைற்றுக்கள் | 150 |
| 4.2 தானியங்களும் தானிய உற்பத்திகளும் | | |
| (அ) தானியங்கள் மற்றும் மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட ஈற்றுணவுகள் | சோர்பேற்றுக்கள் அல்லது நைசின் அல்லது புரோபியோனேட்ஸ் | 300<br>3<br>GMP |
| (ஆ) பாண் மற்றும் வேறு பேக்கரி உற்பத்திகள் | புரோபியோனேட்ஸ் | GMP |
| (இ) விசுக்கோத்துக்கள் மற்றும் இனிப்பு கிறேக்கர்கள் தவிர்ந்த கிறேக்கர்கள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>GMP |
| (ஈ) கேக், குக்கீஸ், பைஸ், டோனட் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உற்பத்தி கள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>GMP |
| 4.3 தீன்பண்ட வகைகள் | | |
| (அ) குளுக்கோஸ் பாணியை அடிப்படை யாகக் கொண்ட தீன்பண்டங்கள் | சல்பைற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 50<br>GMP |
| (ஆ) சுவிங்கம் மற்றும் பபுள்கம் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>GMP |
| 5.0 முட்டை, மீன், கோழி இறைச்சி, இறைச்சி மற்றும் அவற்றின் உற்பத்திகள் | | |
| 5.1 முட்டை, மீன் மற்றும் அவற்றின் உற்பத்திகள் | | |
| (அ) உலர்த்திய மற்றும்/அல்லது வெப்பத்தில் திரையவைக்கப்பட்ட முட்டை உற்பத்திகள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>GMP |

| நிரல் I குறித்துரைக்கப்பட்ட உணவு | நிரல் II அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | நிரல் III ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./கி. கி.) |
|---|---|---|
| (ஆ) புதிய மெல்லோட்டுடலிகள், முதுகென்பிலிகள் மற்றும் முட்தோலிகள் | சல்பைற்றுக்கள் | 100 |
| (இ) உறைந்த மெல்லோட்டுடலிகள், முதுகென்பிலிகள் மற்றும் முட்தோலிகள் | சல்பைற்றுக்கள் | 100 |
| 5.2 கோழி இறைச்சி, இறைச்சி மற்றும் அவற்றின் உற்பத்திகள் | | |
| (அ) பன்றியின் தொடை மற்றும் உப்பிட்ட பன்றி இறைச்சி | நைத்திரேற்றுக்கள் | 80 |
| (ஆ) மீட் போல்ஸ், சொஸேஜஸ், பேர்கர், கோழி இறைச்சி றோல், தகரத்தில் அடைக்கப்பட்ட இறைச்சி உட்பட, வெப்பத்தினால் பரிகரிக்கப்பட்ட, பதப்படுத்தப்பட்ட இறைச்சி மற்றும் கோழி இறைச்சி உற்பத்திகள் | நைத்திரேற்றுக்கள் | 80 |
| (இ) தகரத்தில் அடைக்கப்பட்ட இறைச்சி | நைத்திரேற்றுக்கள் | 80 |
| 6. சோஸ் வகைகள், சூப் வகைகள் மற்றும் நானாவிதப் பொருட்கள் | | |
| 6.1 சோஸ் வகைகள் மற்றும் அவை போன்ற உற்பத்திகள் | | |
| (அ) நீர்மமாக்கப்பட்ட சோஸ் வகைகள் (உ-ம் : சலட் அலங்காரங்கள், மயோனைஸ்) | சோர்பேற்றுக்கள் அல்லது<br>சல்பைற்றுக்கள் அல்லது<br>புரோபியோனேட்ஸ் | 1000<br>300<br>GMP |
| (ஆ) நீர்மமாக்கப்படாத சோஸ் வகைகள் (உ-ம் : வாசனைத் திரவியங்கள் சேர்க்கப்பட்ட தக்காளிச் சாறு, கிரீம் சோஸ், கபிலநிற கறிக் குழம்பு), சோஸ் வகைகளுக்கும் குழம்பு வகை களுக்குமான கலவைகள் மற்றும் தெளிந்த சோஸ் வகைகள் (உ-ம் : மீன் சோஸ்) | சோர்பேற்றுக்கள் அல்லது<br>சல்பைற்றுக்கள் அல்லது<br>புரோபியோனேட்ஸ் | 1000<br>300<br>GMP |

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| குறித்துரைக்கப்பட்ட உணவு | அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள் | ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./ கி. கி.) |
| (இ) கொக்கோவை அடிப்படையாகக் கொண்ட பூசியுண்ணும் உணவுகளும் மரக்கறி மற்றும் விதை சார்ந்த பூசி யுண்ணும் உணவுகளும் தவிர சேன்ட்விச்க்கு பாவிக்கும் பூசியுண்ணும் உணவுகள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 300<br>GMP |
| 6.2 சூப் வகைகள் | | |
| சூப் கலவைகள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 300<br>GMP |
| 6.3 நானாவிதமானவை | | |
| (அ) மூலிகை மற்றும் வாசனைத் திரவியங்கள் | சல்பைற்றுக்கள் | 150 |
| (ஆ) விசேட மருத்துவ நோக்கங்களுக்கென உட்கருதப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டு உணவுகள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1500<br>GMP |
| (இ) ஒல்லியாகும் நோக்கங்களுக்கும் எடைக் குறைப்புக்குமான உணவு வகைகள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1500<br>GMP |
| (ஈ) குழந்தைகளுக்கும் இளம் பிள்ளை களுக்குமான உணவுகள் தவிர்ந்த உணவுக் கட்டுப்பாட்டு உணவுகள் (உ-ம் : உணவுப் பயன்பாட்டுக்கான குறைநிரப்பு உணவுகள்) | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1500<br>GMP |
| (உ) உணவுக் குறைநிரப்பிகள் | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 2000<br>GMP |
| (ஊ) சோயா அவரை உற்பத்திகள் (உ-ம் : டோஃபூ சோயா சோஸ்) | சோர்பேற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>GMP |
| (எ) வாசனைத் திரவியங்களின் பசைகள் | சோர்பேற்றுக்கள் அல்லது சல்பைற்றுக்கள் | 300<br>100 |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *குறித்துரைக்கப்பட்ட உணவு* | *அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள்கள்* | *ஆகக்கூடிய அனுமதிக்கப் பட்ட மட்டம் (கிலோகிராம் ஒன்றுக்கான மில்லிகிராம்) (மி. கி./கி. கி.)* |
| (ஏ) (வேருணவுகள், கிழங்குகள், பயறு வகைகள், அவரையினங்கள் மற்றும் விதை வகைகள் போன்றவற்றிலிருந் தான) உருளைக் கிழங்கு, தானியம், மாவு அல்லது மாப்பொருளை அடிப்படையாகக் கொண்ட நொறுக்குத் தீனிகள் | சோர்பேற்றுக்கள் அல்லது சல்பைற்றுக்கள் அல்லது புரோபியோனேட்ஸ் | 1000<br>50<br>GMP |
| (ஐ) மேற்பூசப்பட்ட விதைகள் மற்றும் விதைக் கலவைகள் உட்பட, பதனிடப் பட்ட விதைகள் (உ-ம் : உலர்ந்த பழத்துடன்) | புரோபியோனேட்ஸ் | GMP |
| (ஒ) இறைச்சி மற்றும் மீனை அடிப்படை யாகக் கொண்ட நொறுக்குத் தீனிகள் | புரோபியோனேட்ஸ் | GMP |

## அட்டவணை III

1. எக்கொள்கலனுக்கு அல்லது உணவுப் பொதிக்கு ஒழுங்குவிதி 3 ஏற்புடைத்தாகின்றதோ அக்கொள்கலன் அல்லது உணவுப்பொதி ஒவ்வொன்றும் பின்வரும் கூற்றைச் சுட்டிக்காட்டுகின்ற சுட்டுத்துண்டொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருள் ஒவ்வொன்றினதும் பொதுவான பெயர் மற்றும் INS இலக்கம் ;

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட பதார்த்தங்கள் இருக்கின்றவிடத்து, பொதுவான பெயர் மற்றும் INS இலக்கம் ;

(இ) அனுமதிக்கப்பட்ட காப்புமுறைப் பொருளொன்று ஐதாக்கியொன்றுடன் கலக்கப்பட்டுள்ளவிடத்து, ஐதாக்கியின் விகிதாசாரமும் ஐதாக்கப்பட்ட தயாரிப்பிலுள்ள காப்புமுறைப் பொருளும்.

2. ஓராம் பந்திக்கமைய அச்சிடப்பட்ட இணைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கூற்று -

(அ) தெளிவாகவும் வாசிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சுட்டுத்துண்டில் துலாம்பரமான முறையில் இருத்தல் வேண்டும் ; கொள்வனவு செய்யும் வழமையான நிலைமையில், உத்தேச வழங்குநரொருவரினால் சுலபமாக வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடிய அத்தகைய முறையில் சுட்டுத்துண்டானது கொள்கலனில் அல்லது உணவுப் பொதியில் பாதுகாப்பாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) வேறு ஏதேனும் பொருளினால் மறைக்கப்பட்டோ அல்லது பார்வைக்குப் புலப்படாத விதத்திலோ இருத்தலாகாது.

*03-934*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.